1967 நவம்பர் 27]

அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு அதனுடைய வேலை மிகவும் நிதானப் போக்கிலே நடந்துகொண்டு இருக்கிறது, ஆகவே உடனடியாக அந்த வேலையைச் செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா? ஏற்கனவே அரசாங்கத்தால் கொடுத்த கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது, அதில் பாக்கியில்லை என்று அரசாங்கம் தெரிவிக்குமா? புதிதாக பஸ்நிலையம் கட்டுவதால் அதன்மூலம் அரசாங்கத்திற்கு வருவாய் வரும் என்ற காரணத்தால் இதை உடனடியாகக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கனவே கொடுத்த கடனை திருப்பிக் கொடுத்தார்களா இல்லையா என்ற தகவல் இல்லை. கொடுத்திருந்தால் மகிழ்ச்சி. ஏற்கனவே 3 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் அனுமதித்ததற்கு முதல் தவணையாக 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த வேலை நடைபெறும். அது பயனுள்ளதாக இருக்கிறது என்று அரசாங்கம் நினைப்பதால் தான் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே தள்ளிவைக்கப்பட்ட வினாக்கள் 450 முதல் 452 வரை இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பதநீர் இறக்கும் உரிமம்

*வி௭.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுவிலக்கு காரணமாக மரமேறும் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்க லைசென்சுகள் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதை மாற்றி அமைத்து லைசென்சுகள் உடனடியாகக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: (அ) துறைப் பணியாளர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படவில்லை என்ற காரணத்தால் மரமேறும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதில் தாமதம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: லைசென்ஸ்கள் வழங்கப்படுவது குறிப்பாக பருவகாலத்திற்குப் பிறகுதான் இது வரை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசாவது டிசம்பர் மாதத்திற்குள் லைசென்ஸ்கள் வழங்குவதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவரவர்களே, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களின்படி லைசென்ஸ்கள் வழங்கப்படுவதில் தவக்கம் இல்லை. லைசென்ஸ்கள் வாங்கிக் கொள்கிறவர்கள் மட்டத்தில்தான் ஏராளமான தவக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. எம். எஸ். மணி : பழைய அரசாங்கத்தில் மரத்தில் ஏறி பதநீர் இறக்கத்தான் லைசென்ஸ் கொடுத்தார்கள், விற்பனை செய்ய லைசென்ஸ்கள் கொடுக்கப்படவில்லை. பல போராட்டங்களுக்குப் பிறகும் கொடுக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது லைசென்ஸ்களைப் பற்றியது. அதுபற்றிய விவரங்கள்தான் என்னிடத்தில் இருக்கின்றன.

* 451 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மதிப்பிற்குரிய முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மரமேறும் தொழிலாளர்களுக்கு தற்போது பதநீர் இறக்க ஆண்டுக்கு ஒரு முறை வழங்கிவரும் லைசென்சு முறையை, ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் மாற்றியமைக்க வேண்டும் என மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன மாநாடுகளில் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளன மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட எத்தீர்மானமும் அரசாங்கத்திடம் வந்து சேரவில்லை.

போலீஸ் துறையிலுள்ள நாய்கள்

* 452 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் போலீஸ் மோப்ப நாய்கள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளை மேலும் அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ)—

சென்னை மாநகரம்—

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை	[illegible] நாய்கள்
தற்போதுள்ள எண்ணிக்கை	3 நாய்கள்
	4 நாய்க் குட்டிகள்

மதுரை—

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை	5 நாய்கள்
தற்போதுள்ள எண்ணிக்கை	5 நாய்கள்

கோயம்புத்தூர்—

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை	3 நாய்கள்
தற்போதுள்ள எண்ணிக்கை	1 (பயிற்சியில் உள்ளது)

(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த எண்ணிக்கை குறைந்ததற்கான காரணம் என்ன? சரியான முறையில் வேலை செய்யவில்லை என்ற காரணத்தால் குறைக்கப்பட்டதா அல்லது என்ன காரணத்தால் குறைக்கப்பட்டது?